அலகு – 4

மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும்

கற்றலின் நோக்கங்கள்

- மனித உரிமைகள் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளுதல்
- உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் உள்ள தொடர்பினைப் புரிந்து கொள்ளுதல்
- மனித உரிமைகளின் முக்கியத்துவம் பற்றி அறிந்து கொள்ளுதல்
- மனித உரிமைகள் அனைவருக்கும் உரியது என்பதைப் பற்றி புரிந்து கொள்ளுதல்
- 1948இல் நடைமுறைப்படுத்தப்பட்ட மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய அறிவிப்பின் பொருள் மற்றும் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்

CNZ69

அறிமுகம்

பிறப்பால் அனைவரும் சமம். உலகில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தன் விருப்பப்படி வாழ உரிமை உண்டு. மனித உரிமைகளானது தனிநபர்கள் மற்றும் சமூகம் தொடர்பானவை. மனித உரிமைகள் மக்கள் சுதந்திரமாக மற்றும் விருப்பப்படி வாழ்வதை உறுதிசெய்வதுடன் இயல்பாக பெறும் அனைத்து உரிமைகளையும் குறிப்பிடுகிறது. மக்களின் சமஉரிமைகளை ஒவ்வொரு நாடும் உறுதி செய்கிறது.

மனித உரிமைகள் என்றால் என்ன?

மனித உரிமைகள் என்பது இனம், பாலினம், தேசிய இனம், இனக்குழுக்களின் தன்மை, மொழி மற்றும் சமய வேறுபாடின்றி அனைத்து மனிதர்களுக்குமான இயல்பான உரிமைகள் ஆகும். மனித உரிமைகளில் அடிமைத்தனம் மற்றும் சித்திரவதைகளிலிருந்து சுதந்திரம், கருத்து மற்றும் கருத்துச் சுதந்திரம் மற்றும் நியாயமான விசாரணை, வாழ்வதற்கான உரிமை, வேலை மற்றும் கல்விபெறும் உரிமை ஆகியவை அடங்கும்.

மனித உரிமைகள் என்ற கருத்து எங்கிருந்து ஆரம்பித்தது?

அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் தொகுப்பானது ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் வேரூன்றியிருந்தது.

அ. எழுதப்பட்ட மனித உரிமை ஆவணங்களின் முன்னோடி

மகா சாசனம் (The Magna Carta), 1215 **(இங்கிலாந்து)** – மக்களுக்குப்புதிய உரிமைகளை வழங்கியதுடன் அரசரைச் சட்டத்திற்கு உட்படுத்தியது.

உரிமை மனு (The Petition of Right), 1628 **(இங்கிலாந்து)** – மக்கள் உரிமைகளின் தொகுப்பு.

ஹேபியஸ் கார்பஸ் சட்டம், 1679, இங்கிலாந்து – மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான சட்டம்.

ஆங்கில உரிமைகள் மசோதா, 1689 – சில அடிப்படை சமூக / குடிமக்கள் உரிமைகளை அமைத்தல்.

மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைகள் பற்றிய பிரான்சின் அறிவிப்பு, 1789 – சட்டத்தின் கீழ் அனைத்து குடிமக்களும் சமம் என்று கூறும் பிரான்சின் ஆவணம்.